அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 25B - ஐரோப்பிய வரலாறு



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 25B - ஐரோப்பிய வரலாறு

## புள்ளி வழங்கும் திட்டம்

- I பகுதி - 01 x 40 = 40

II பகுதி

| | | |
|---|---|---|
| கட்டாய வினாவிற்கு | = | 18 |
| ஏனைய 03 வினாக்களிற்கு 14 வீதம் | = | 42 |
| II ஆம் பகுதிக்கு மொத்தப் புள்ளி | = | 60 |

இறுதிப்புள்ளி - 40 + 60 = 100

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................................ ✓ (4/5)
............................................................................
............................................................................

(ii) ............................................................................ ✓ (3/5)
............................................................................
............................................................................

(iii) ............................................................................ ✓ (3/5)
............................................................................
............................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் “வினாப்பத்திரம் I” என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி “வினாப்பத்திரம் II” எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ඉතිහාසය II (I කොටස)
வரலாறு II (பகுதி I)
History II (Part I)

25-B T II

23.08.2018 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

ஐரோப்பிய வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி 1989 வரை

சுட்டெண்: ......................................

**அறிவுறுத்தல்கள்:**

* இப்பகுதியில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாப்பத்திரத்திலேயே** விடை எழுதுக.
* ஒவ்வொரு வினா தொடர்பாகவும் **ஐவைந்து** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** சரியானது. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து, பின் அதனை இப்பத்திரத்திலேயே **அறிவுறுத்தல்களுக்கமைய** உமது விடையைக் குறித்துக் காட்டுக.
* இப்பகுதிக்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்
* இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று** மணித்தியாலங்களாகும். உமது விடைத்தாள்களை ஒப்படைக்கும் பொழுது பகுதி I இற்கான விடைகளை எழுதிய பின்னர் அதனைப் பகுதி II இற்கான விடைத்தாள்களுடன் **இணைத்து** ஒப்படைக்க வேண்டும்.

## பகுதி I

● **1 - 10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ் ஐந்தினுள் **ஒன்று மற்றவையோடு பொருந்தாது. பொருந்தாததைத்** தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. (1) ரைபர் (2) தேம்ஸ் (3) டாகுஸ் (4) விஸ்ருலா (5) கீல் (.........)

2. (1) தீப்ஸ் (2) மெகரா (3) மர்மாரா (4) கொரிந்த் (5) மிலேட்டஸ் (.........)

3. (1) அலெக்சாந்தர் (2) திராஜன் (3) ஹட்ரியன் (4) அன்ரொனினஸ் பியூஸ் (5) மார்கஸ் அவுரேலியஸ் (.........)

4. (1) ஹோரஸ் (2) ஒவிட் (3) லிவி (4) ரசிற்றஸ் (5) அலரிக் (.........)

5. (1) யூதர் (2) விஸிகொத்ஸ் (3) ஒஸ்றோகொத்ஸ் (4) ஆங்கிலோ சக்ஸன் (5) வாண்டல்ஸ் (.........)

6. (1) பொலஞ்ஞா (2) லைஸியம் (3) பாரிஸ் (4) ஒக்ஸ்போர்ட் (5) கேம்பிரிட்ஜ் (.........)

7. (1) கடலோடி ஹென்றி (2) யூலியற் (3) லாசலே (4) மார்குயிற் (5) ஹென்றி ஹட்சன் (.........)

**8.** (1) ஜோன் வைகிளிப்
(2) ஜோன் ஹஸ்
(3) வுல்றிஜ் சுவிங்கிளி
(4) ஜோன் றெட்சல்
(5) ஜோன் கல்வின் (.........)

**9.** (1) சார்ள்ஸ் ரவுன்சென்ட்
(2) ஜோர்ஜ் வாசிங்டன்
(3) ஜோன் அடம்ஸ்
(4) தோமஸ் ஜெபர்ஸன்
(5) அன்றூ ஜக்சன் (.........)

**10.** (1) அரபு லீக்
(2) ஐக்கிய நாடுகள் சபை (UNO)
(3) பெற்றோலியம் ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (OPEC)
(4) ஐரோப்பிய பொருளாதார சமூகம் (EEC)
(5) மத்திய ஒப்பந்த நாடுகள் (CENTO) (.........)

● **11 - 15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐவைந்து சோடி** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியில் உள்ள பெயர்கள் / வெளிப்படுத்தல்கள் ஒன்றுடனொன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**11.** (1) பெலப்பனிசியன் போர் - ஏதென்ஸ் உம் - ஸ்பார்ட்டா உம்
(2) பியூனிக் போர்கள் - உரோமும் - கார்தேஜும்
(3) நூற்றாண்டுப் போர் - இங்கிலாந்தும் பிரான்ஸும்
(4) ஏழாண்டுப் போர் - இங்கிலாந்தும் - பிரஷியாவும்
(5) ரோஜாப்பூ போர்கள் - லங்காஸ்டரும் - யோர்க்கும் (.........)

**12.** (1) பிளேட்டோ - குடியரசு (The Republic)
(2) அரிஸ்டோட்டல் - அரசியல் (Politics)
(3) புனிதர் ஒகஸ்ரின் - கடவுளின் நகரம் (The City of God)
(4) புனிதர் தோமஸ் அக்குவைனாஸ் - சும்மா தியோலொஜிக்கா
(5) மார்டின் லூதர் - கிறிஸ்தவ மத நிறுவனம் (Institutes of the Christian Religion) (.........)

**13.** (1) ஹப்ஸ்பேர்க் - இங்கிலாந்து
(2) தியூடர் - இங்கிலாந்து
(3) ஸ்ருவார்ட் - இங்கிலாந்து
(4) ஹனோவர் - இங்கிலாந்து
(5) வின்ட்ஸர் - இங்கிலாந்து (.........)

**14.** (1) ஸ்ரார் சேம்பர் - VII ஆம் ஹென்றி
(2) மதவிலக்கு - VIII ஆம் ஹென்றி
(3) வெல்ல முடியாத ஆர்மடா - II ஆம் பிலிப்
(4) லெற்றே டீ கட்செற் (விசாரணையின்றி ஒருவர் சிறைவாசம் அனுபவிக்கச் செய்யும் கட்டளைச்சட்டம்) - XIII ஆம் லூயி
(5) கண்டத்திட்டுக் கொள்கை - நெப்போலியன் பொனப்பார்ட் (.........)

**15.** (1) பார்த்தலொமியூ டயஸ் - ஆபிரிக்காவின் தென்முனை வரை கடல் பயணம்
(2) வஸ்கொடகாமா - கள்ளிக் கோட்டையை அடைந்தமை
(3) கிறிஸ்தோபர் கொலம்பஸ் - கரிபியனில் இறங்கியமை
(4) பிரான்சிஸ் டிறேக் - மெக்சிக்கோவை வெற்றி கொண்டமை
(5) பிரான்சிஸ்கோ பிஸாரோ - பெருவை வெற்றி கொண்டமை (.........)

- **16 - 25** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் /கூற்றுகள் /திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையிலே தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கிலே தரப்படவில்லை. **Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலிற்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

**16.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | கிளிஸ்தெனீஸ் | A | மருத்துவத்தின் தந்தை |
| (ii) | ஹெரடோற்றஸ் | B | 'விஞ்ஞானபூர்வ' சோஸலிசத்தின் தாபகர் |
| (iii) | ஹிப்போகிரடீஸ் | C | மானிடவாதத்தின் தந்தை |
| (iv) | பெற்றாக் | D | அதினியன் குடியாட்சியின் தந்தை |
| (v) | கார்ள் மாக்ஸ் | E | வரலாற்றின் தந்தை |

(1) BEACD (2) CEABD (3) DCEAB (4) DEACB (5) EDACB (……)

**17.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | பிளேட்டோ | A | "இளவரசன் சிங்கத்தைப் போலவும் நரியைப் போலவும் பாவனை செய்தல் வேண்டும்" |
| (ii) | அரிஸ்ரோட்டல் | B | "பெருமளவானோரின் பெரியளவிலான மகிழ்ச்சி" |
| (iii) | மக்கியாவல்லி | C | 'அதிகாரப் பகிர்வுக் கோட்பாடு' |
| (iv) | மொன்டெஸ்கியூ | D | "மனிதன் ஓர் அரசியல் பிராணி" |
| (v) | ஜெரமி பெந்தம் | E | "தத்துவஞானிகளே மன்னர்கள் ஆகவேண்டும்" |

(1) BEACD (2) CEABD (3) DCEAB (4) DEACB (5) EDACB (……)

**18.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | மிலான் கட்டளை | A | யார் ஆட்சி புரிந்தாலும் அவரது மதம் அவர் குடிமக்களின் மதமாக இருத்தல் வேண்டும் |
| (ii) | நான்ரீஸ் கட்டளை | B | பிரான்சின் பெரும்பான்மையான மக்களின் மதமாக கத்தோலிக்கத்தை ஏற்றுக்கொள்ளல் |
| (iii) | ஒக்ஸ்பேர்க் சமாதான உடன்படிக்கை | C | கிறிஸ்தவர்களுக்கு மத சகிப்புத் தன்மையை வழங்கல் |
| (iv) | 1801 கொன்கோர்ட் உடன்பாடு | D | வத்திக்கான் நகரத்தை இறைமையுள்ள அரசாகவும் கத்தோலிக்க மதத்தை இத்தாலியின் அரச மதமாகவும் ஏற்றுக்கொள்ளல். |
| (v) | லத்தரன் உடன்படிக்கை | E | பிரான்சிய புரட்டஸ்தாந்தர்களுக்கு மத சகிப்புத் தன்மையை வழங்கல் |

(1) BEACD (2) CEABD (3) DCEAB (4) DEACB (5) EDACB (……)

**19.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | மிலேச்சர் படையெடுப்பு | A | பிரான்சியப் புரட்சி |
| (ii) | கொன்ஸ்தாந்திநோபிளின் வீழ்ச்சி | B | மேற்கு உரோமப் பேரரசின் வீழ்ச்சி |
| (iii) | நிதிநெருக்கடியும் எஸ்ரேற் ஜெனரலைக் கூட்டலும் | C | முதலாம் உலகப் போர் |
| (iv) | சரஜிவோவில் நடந்த படுகொலை | D | இரண்டாம் உலகப் போர் |
| (v) | போலந்து மீதான ஜேர்மனியின் ஆக்கிரமிப்பு | E | மறுமலர்ச்சி |

(1) BEACD (2) CEABD (3) DCEAB (4) DEACB (5) EDACB (……)

**20.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | கல்வினிய வாதிகள் | A | இங்கிலாந்து |
| (ii) | ஹியுக்கனற்ஸ் | B | ஒல்லாந்து |
| (iii) | பியூரிட்டன்ஸ் | C | ஸ்கொட்லாந்து |
| (iv) | பிரெஸ்பிற்றிரியன்ஸ் | D | சுவிட்சர்லாந்து |
| (v) | சீர்திருத்தப்பட்ட திருச்சபையின் அங்கத்தவர்கள் | E | பிரான்ஸ் |

(1) BEACD (2) CEABD (3) DCEAB (4) DEACB (5) EDACB (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **21.** | (i) றொபேட் வால்போல் | A | பிரான்சின் ஐந்தாம் குடியரசின் முதல் ஜனாதிபதி |
| | (ii) மார்ஷல் டிட்டோ | B | சோவியத் யூனியனின் கடைசி ஜனாதிபதி |
| | (iii) கொன்றாட் அடினோர் | C | யூகோசிலாவியாவின் ஜனாதிபதி |
| | (iv) சார்ள்ஸ் டீ கோல் | D | இங்கிலாந்தின் முதல் பிரதமர் |
| | (v) மிகையில் கோர்ப்பசேவ் | E | ஜேர்மனிய சமஷ்டிக் குடியரசின் முதல் சான்சலர் |

(1) BEACD (2) CEABD (3) DCEAB (4) DEACB (5) EDACB (.........)

| | X | | Y |
|---|---|---|---|
| **22.** | (i) லிகூரியன், சிசல்பைன் மற்றும் பார்த்தினோபியன் குடியரசுகள் | A | மாஸினி |
| | (ii) 'வெறுமனே ஒரு புவியியல் (வெளிப்பாடு) விவரணம்' | B | நெப்பொலியன் பொனப்பார்ட் |
| | (iii) இளம் இத்தாலி | C | கரிபோல்டி |
| | (iv) செஞ்சட்டை இயக்கம் | D | இரண்டாம் விக்ரர் இமானுவேல் |
| | (v) ஒன்றிணைந்த இத்தாலி | E | மெற்றர்னிக் |

(1) BEACD (2) CEABD (3) DCEAB (4) DEACB (5) EDACB (.........)

| | X | | Y |
|---|---|---|---|
| **23.** | (i) வேர்செய் உடன்படிக்கை | A | பல்கேரியா |
| | (ii) சென்ற். ஜேர்மைன் உடன்படிக்கை | B | துருக்கி |
| | (iii) நியூலி உடன்படிக்கை | C | ஹங்கேரி |
| | (iv) ரியனொன் உடன்படிக்கை | D | ஜேர்மனி |
| | (v) லௌசான் உடன்படிக்கை | E | ஆஸ்திரியா |

(1) BEACD (2) CEABD (3) DCEAB (4) DEACB (5) EDACB (.........)

| | X | | Y |
|---|---|---|---|
| **24.** | (i) ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) | A | வாஷிங்டன் |
| | (ii) ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான கலாசார நிறுவனம் (யுனெஸ்கோ) (UNESCO) | B | வியன்னா |
| | (iii) உலக வங்கி | C | ஜெனிவா |
| | (iv) உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) | D | பாரிஸ் |
| | (v) சர்வதேச அணுசக்தி நிறுவனம் (IAEA) | E | நியுயோர்க் |

(1) BEACD (2) CEABD (3) DCEAB (4) DEACB (5) EDACB (.........)

| | X | | Y |
|---|---|---|---|
| **25.** | (i) றிக்வி லி | A | பர்மா |
| | (ii) டக் கம்மர்ஷில்ட் | B | ஆஸ்திரியா |
| | (iii) யூதாண்ட் | C | நோர்வே |
| | (iv) கூர்ட் வால்ட் கெய்ம் | D | பெரு |
| | (v) பெரஸ் டீ குயிலர் | E | சுவீடன் |

(1) BEACD (2) CEABD (3) DCEAB (4) DEACB (5) EDACB (.........)

- **26 - 30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

(A) யும் (B) யும் மட்டும் சரியாயின் ........................................ 1 எனவும்
(B) யும் (C) யும் மட்டும் சரியாயின் ........................................ 2 எனவும்
(C) யும் (D) யும் மட்டும் சரியாயின் ........................................ 3 எனவும்
(A) யும் (C) யும் மட்டும் சரியாயின் ........................................ 4 எனவும்

ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் .......... 5 எனவும்
அடைப்புப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரி |

**26.** பின்வருவோருள் எதென்ஸின் ஆட்சியாளர் யாவர்?
(A) சோலன் (B) செரக்செஸ்
(C) பெரிக்கிளிஸ் (D) ஹனிபல் (.........)

**27.** பின்வருவோருள் உரோமப் பேரரசர்கள் யாவர்?
(A) யூலியஸ் சீசர் (B) பொம்பே
(C) ஒகஸ்டஸ் (D) தியோடோசியஸ் (.........)

**28.** பின்வரும் கூற்றுகளில் மானிய முறைமை தொடர்பான சரியான கூற்று / கூற்றுகள் எவை?
(A) இடைக்கால ஐரோப்பாவில் நிலவிய அரசியல், சமூக பொருளாதார முறைமை மானிய முறைமை என அறியப்படுகிறது.
(B) மானியப் பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது.
(C) மானிய அரசுகளில் வலிமையான மத்திய அரசாங்கம் காணப்படும்.
(D) மன்னர்களிடம் வலுமிக்க நிலையான இராணுவம் அமைந்திருக்கும். (.........)

**29.** பின்வருவனவற்றுள் எதிர் மதச் சீர்திருத்தத்தின் பிரதான மூலங்கள் எவை?
(A) ஜேர்மனியில் இருந்து லூதரன் திருச்சபை
(B) யேசு சபை
(C) ட்ரென்ற் கவுன்சில்
(D) கத்தோலிக்க சங்கம் (.........)

**30.** பின்வரும் கூற்றுகளில் பனிப்போர் குறித்த சரியான கூற்று / கூற்றுகள் எவை?
(A) ஐக்கிய அமெரிக்க நாடுகள், சோவியத் யூனியன் தலைமை தாங்கிய இரண்டு அதிகார அணிகளுக்கிடையே இருந்த கருத்தியல், அரசியல், இராஜதந்திர ரீதியிலான போராட்டமே பனிப்போர் ஆகும்.
(B) 1949 இல் வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் அமைப்பு உருவாக்கம்
(C) 1955 இல் வார்சோ ஒப்பந்தம் கையெழுத்திட்டமை.
(D) 1989 இல் பனிப்போர் முடிவுற்றதாகப் பொதுவாகக் கருதப்படுகின்றது. (.........)

- **31 - 35** ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று உரிய தலைப்புடன் **பொருந்தாது** உள்ளது. அதனைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** அடைப்புப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

**31.** கைத்தொழில் புரட்சிக் காலத்தின் பிரதான கண்டுபிடிப்புக்கள்
(1) காற்றாலை (2) பறக்கும் சட்டில்
(3) நூல் நூற்கும் ஜெனி (4) நீர்ச்சட்டம்
(5) நீராவி இயந்திரம் (.........)

**32.** **பிரான்சியப் புரட்சியுடன் தொடர்புடைய முக்கிய நிகழ்வுகள்**
(1) ரெனிஸ் மைதான சத்தியம் (2) பொஸ்ரன் தேநீர் விருந்து
(3) பஸ்ரீல் கைப்பற்றப்பட்டமை (4) மனிதனதும், குடிமக்களினதும் உரிமைப் பிரகடனம்
(5) பதினாறாம் லூயியின் சிரச்சேதம் (......)

**33.** **வியன்னா மகாநாட்டில் பங்கு கொண்ட பிரதான தலைவர்கள்**
(1) ஆஸ்திரியாவின் மெற்றர்னிக் (2) பிரசியாவின் ஹார்டன்பேர்க்
(3) பிரித்தானியாவின் காசில்றீ (4) ருசியாவின் I ஆம் சார் அலெக்சாண்டர்
(5) சார்டீனியாவின் கவூர் (......)

**34.** **இரண்டாம் உலகப் போருக்கான காரணங்கள்**
(1) வேர்செய் உடன்படிக்கையின் குறைபாடுகள்
(2) இத்தாலியில் பாஸிஸ வாதத்தின் தோற்றம்
(3) ஜேர்மனியில் நாஸிஸ வாதத்தின் தோற்றம்
(4) ருசிய - துருக்கி யுத்தமும் பால்க்கன் நெருக்கடியும்
(5) ஆயுத உற்பத்திப் போட்டி (......)

**35.** **சோவியத் யூனியனின் ஆட்சியாளர்**
(1) நிகித்தா குருஷேவ் (2) அலெக்சி கொசிஜின் (3) யூரி ககாரின்
(4) லியோனிட் பிரஸ்னேவ் (5) அன்ட்ரபோவ் (......)

● **36 - 40** வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| **1** | சரியானது. | பிழையானது. |
| **2** | சரியானது. | சரியானது. |
| **3** | பிழையானது. | பிழையானது. |
| **4** | பிழையானது. | சரியானது. |
| **5** | சரியானது. | சரியானதும் முதலாம் கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** | |
|---|---|---|---|
| **36.** | பாரசீகர்களுக்கு எதிராக கிரேக்கர் மேற்கொண்ட யுத்தத்தை வைத்து ஹோமர் தனது வீர காவியத்தை எழுதினார். | 'இளவரசன்' என்ற நூலின் ஆசிரியர் உரோமானிய அரசியல் ஞானியான சிசரோ ஆவார். | (.........) |
| **37.** | நான்காம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை உரோமப் பேரரசுகள் கிறிஸ்தவ மதத்தை ஒழிக்கும் வகையில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக இடையிடையே கொடூரமான சித்திரவதைகளை மேற்கொண்டார்கள். | பேரரசர் கொன்ஸ்ரான்ரைன் உரோமப் பேரரசை கிழக்கு, மேற்கு என இரண்டு பாகங்களாகப் பிரித்தான். | (.........) |
| **38.** | வணிகவாதத்தின் பிரதான பண்புகளில் ஒன்று, பொருளாதார விவகாரங்களில் அரசின் தலையீடு ஆகும். | வால்டெயரால் வணிகவாதக் கோட்பாடு முதலில் முன்வைக்கப்பட்டது. | (.........) |
| **39.** | நவீன ஐரோப்பிய வரலாற்றின் மத, அரசியல் துறைகளில் ஒரு திருப்பு முனையை வெஸ்ற் பேலியோ ஒப்பந்தம் குறித்து நின்றது. | மத ரீதியான யுத்தங்களுக்கு ஒரு முடிவை ஏற்படுத்திய வெஸ்ற் பேலியா ஒப்பந்தம் ஆனது ஐரோப்பாவில் நவீன அரச முறைமை ஒன்று உருவாகுவதற்கு அத்திவாரம் இட்டதைக் குறிப்பதாகவும் கருதப்படுகின்றது. | (.........) |
| **40** | மேற்குலக நாடுகளுடன் சமாதான சகவாழ்வுக் கொள்கை ஒன்றினை ஜோசப் ஸ்ராலின் ஆரம்பித்தார். | பேர்லின் சுவர் உடைக்கப்பட்டமை மேற்கு, கிழக்கு ஜேர்மனிகளின் ஐக்கியத்திற்கு வழிவகுப்பதாக அமைந்தது. | (.........) |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2018

විෂය අංකය / பாட இலக்கம்: **25B**

විෂයය / பாடம்: **ஐரோப்பிய வரலாறு**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

## I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 4 | 21. | 3 | 31. | 1 |
| 02. | 3 | 12. | 5 | 22. | 1 | 32. | 2 |
| 03. | 1 | 13. | 1 | 23. | 4 | 33. | 5 |
| 04. | 5 | 14. | 2 | 24. | 5 | 34. | 4 |
| 05. | 1 | 15. | 4 | 25. | 2 | 35. | 3 |
| 06. | 2 | 16. | 4 | 26. | 4 | 36. | 3 |
| 07. | 1 | 17. | 5 | 27. | 3 | 37. | 2 |
| 08. | 4 | 18. | 2 | 28. | 1 | 38. | 1 |
| 09. | 1 | 19. | 1 | 29. | 2 | 39. | 5 |
| 10. | 2 | 20. | 4 | 30. | 5 | 40. | 4 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ඉතිහාසය II (II කොටස)
வரலாறு II (பகுதி II)
History II (Part II)

25-B T II

ஐரோப்பிய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி 1989 வரை

**அறிவுறுத்தல்கள்:**

* **முதலாம்** வினாவுக்கும் வேறு ஏதாவது **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **ஐரோப்பாவின் புறவுருவப்படம்** வழங்கப்படும்.)

## பகுதி II

1. உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப் படத்திலே கீழே தரப்பட்டுள்ள **இடங்கள் எல்லாவற்றையும் குறித்துப் பெயரிட்டு** அவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.

(i) கோர்சிக்கா (ii) பீரணீஸ் (iii) றைன் நதி
(iv) கருங்கடல் (v) இலண்டன் (vi) பேர்லின்
(vii) சென்ற். பீற்றர்ஸ்பேக் (viii) சுவிட்சர்லாந்து

(சரியாகக் குறித்துப் பெயரிட்ட ஒவ்வொன்றுக்கும் **01** புள்ளி; சுருக்கமான வரலாற்று குறிப்பு ஒவ்வொன்றுக்கும் **05** புள்ளிகள்)

2. கிரேக்க கலாசாரத்தின் பிரதான பண்புகளைப் பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

3. "ஐரோப்பிய நாகரிகத்தின் வளர்ச்சியிலே மறுமலர்ச்சி ஒரு திருப்பு முனையைக் குறித்து நின்றது."
   (i) மறுமலர்ச்சி ஆரம்பித்த நாட்டின் பெயரைத் தருக. (01 புள்ளி)
   (ii) மறுமலர்ச்சிக்கு ஆதரவளித்த **இருவரின்** பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)
   (iii) மறுமலர்ச்சியின் தோற்றத்திற்கு வழிவகுத்த பிரதான காரணிகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
   (iv) கலைத்துறையிலும், அரசியல் தத்துவ ஞானத்துறையிலும் ஏற்பட்ட விழிப்புணர்வை விஷேட கவனத்திற் கொண்டு ஐரோப்பிய நாகரிகத்தின் வளர்ச்சியிலே மறுமலர்ச்சி ஒரு திருப்புமுனையைக் குறித்து நின்றதனைப் பரிசீலனை செய்க. (07 புள்ளிகள்)

4. (i) பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் தேசிய அரசுகளின் தோற்றத்திற்கு வழிவகுத்த காரணிகள் யாவை? (06 புள்ளிகள்)
   (ii) தேசிய அரசுகளின் பிரதான பண்புகளைப் பரிசீலனை செய்க. (08 புள்ளிகள்)

5. (i) அமெரிக்க சுதந்திரப் போருக்கான பிரதான காரணங்களை ஆராய்க. (06 புள்ளிகள்)
   (ii) அமெரிக்க சுதந்திரப் போரின் பிரதான விளைவுகளைப் பரிசீலனை செய்க. (08 புள்ளிகள்)

6. (i) 1815 - 1848 காலப்பகுதியில் ஜேர்மனிய ஐக்கியத்திற்குப் பிரதான தடையாக இருந்தவற்றை எடுத்துக் காட்டுக. (06 புள்ளிகள்)
   (ii) 1862 - 1871 காலப்பகுதியில் ஜேர்மனிய ஐக்கியத்திற்காகப் பிஸ்மார்க் முன்னெடுத்த நடவடிக்கைகளை நுணுகிப் பரிசீலனை செய்க. (08 புள்ளிகள்)

7. "முதலாம் உலகப் போருக்கான பிரதான காரணம் ஐரோப்பா இரண்டு அதிகார அணிகளாகப் பிரிந்து நின்றமையே ஆகும்."

(i) முதலாம் உலகப் போர் ஆரம்பித்தமைக்கான உடனடி நிகழ்வு என்ன? (01 புள்ளி)

(ii) ஒன்றுக்கொன்று எதிரான இரண்டு அதிகார அணிகளில் இருந்த இவ்விரண்டு நாடுகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) ஐரோப்பா இரண்டு அதிகார அணிகளாக பிரிந்த விதத்தை தெளிவுபடுத்துக. (04 புள்ளிகள்)

(iv) ஐரோப்பா இரண்டு அதிகார அணிகளாகப் பிரிவுண்டமை முதலாம் உலகப் போரின் ஆரம்பத்திற்கு எந்தளவிற்கு காரணமாயிற்று என்பதனைப் பரிசீலனை செய்க. (07 புள்ளிகள்)

8. ருசியாவில் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் போல்ஷ்விக்கினரால் 1924 வரை மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களைப் பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

9. **(A)** பகுதிக்கு **அல்லது (B)** பகுதிக்கு மட்டும் விடை எழுதுக.

**(A)** (i) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பிரதான நோக்கங்களைச் சுருக்கமாக குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ii) அத்தாபனம் அதன் நோக்கங்களை அடைந்து கொள்வதில் எந்தளவிற்கு வெற்றிபெற்றுள்ளது என்பதனைப் பரிசீலனை செய்க. (09 புள்ளிகள்)

**(B)** கீழ்வருவனவற்றில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறு குறிப்புகள் எழுதுக.

(i) பேரரசு ஆரம்பகாலம் வரையிலான உரோமில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு மாற்றங்கள்

(ii) மானிய முறைமையின் வீழ்ச்சி

(iii) போர்த்துக்கேயரால் மேற்கொள்ளப்பட்ட புவியியல் கண்டு பிடிப்புகள்

(iv) 1688 ஆங்கிலப் புரட்சி

(v) ஐரோப்பிய காங்கிரஸ் முறைமை

(vi) போர் இடைக்காலத்தில் சர்வாதிகார ஆட்சி

(ஒவ்வொரு குறிப்புக்கும் 07 புள்ளிகள் வீதம்)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]


ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

| | | | |
|---|---|---|---|
| ඉතිහාසය II<br>வரலாறு II<br>History II | 25-B | T | |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. **1**

විභාග අංකය / சுட்டெண் / Index No. ....................................



## ஐரோப்பிய வரலாறு
## பகுதி II

**( 01 ) உமக்கு வழங்கப்பட்டுள்ள ஐரோப்பிய புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள இடங்கள் எல்லாவற்றையும் குறித்துப் பெயரிட்டு அவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.**

(i) கோர்சிக்கா
(ii) பிரணீஸ்
(iii) றைன் நதி
(iv) கருங்கடல்
(v) இலண்டன்
(vi) பேர்லின்
(vii) சென்பீற்றஸ் பேர்க்
(viii) சுவிட்சர்லாந்து

சரியாகக் குறித்துப் பெயரிட்ட ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு புள்ளிகளும் சுருக்கமான வரலாற்றுக் குறிப்பு ஒவ்வொன்றிற்கும் 5 புள்ளிகளும் வழங்குக.

**( 18 புள்ளிகள் )**

**(02 ) கிரேக்க கலாசாரத்தின் பிரதான பண்புகளைப் பரிசீலனை செய்க.**

சமயம் :

- இயற்கைப் பொருட்களைக் கடவுளாக நம்பி வழிபட்டனர்.
- பல தெய்வ வழிபாட்டு முறைகள் காணப்பட்டன. வானத்தின் கடவுளைத் தலைமைக் கடவுளாகக் கொண்டு செயற்பட்டனர்.
- சகல கடவுள்களும் ஒலிம்பஸ் மலையில் வசிப்பதாக நம்பினர்.
- கிரேக்க சமயம் சுதந்திரமான சிந்தனைக் கருத்துக்களிற்குத் தடையாக இல்லாததனால் கலைத்துறை வளர்ச்சி ஏற்பட்டது. சமய ஒற்றுமை காணப்பட்டது.

கலையும் கட்டடக் கலையும்

- கிரேக்கக் கலைகள் மானிடவாதத்தையும் இயற்கைத் தன்மையையும் கொண்டமைந்தன.
- சாதாரண மனிதர்களின் சிலைகள் செய்யப்பட்டதுடன் அனேகமாகத் தெய்வங்களின் சிலைகள் நேர்த்தியான மனித உடலமைப்பில் செய்யப்பட்டிருந்தன.
- எதென்ஸ் நாட்டின் அக்ரோபொலிஸ் மலை உச்சியில் பாத்தினன் தேவாலயம் அதீனா தேவதைக்காக நிர்மாணிக்கப்பட்டது.
- டோரிக், கொரிந், அயோனிக் கட்டிடக்கலை முறைகளைக் கையாண்டனர்.
- பாத்தீனன் தேவாலயத்தில் அதீனா தேவதையின் சிலையும் சியுஸ் தேவாலயத்தில் சியுஸ் கடவுளின் சிலையும் சிறப்பான முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- பீடியாஸின் – அதீனா, சியுஸ் சிலை
- மையிரனின் – தட்டெறியும் மனிதனின் சிலை

இலக்கியம் :

- வீரகாவியங்கள் - ஹோமரின் இலியட், ஒடிசி
- கவிதை பிண்டரின், செபோவின் கவிதைகள்
- நாடகம் - ஈஸ்கீலஸ்,வோ போக்னீஸ் என்போரின் “சோகாந்த”
- அறிஸ்டோபனிஸின் - சுகாந்த

வரலாற்று நூல்கள்

- ஹெறடோடஸின் பாரசீக யுத்தம், தூசிடைசின் - பெலப்பனேசிய யுத்தம்

தத்துவம் :

- கிரேக்க நாகரிகத்தின் சிறப்பம்சமாக தத்துவ சிந்தனைகள் காணப்படுகினறன.
- பல்வேறு துறைகளில் இத்தத்துவ வளர்ச்சி இடம்பெற்றது. (பௌதிகவியல், விஞ்ஞானம், தர்க்கவியல், வானியல்)
- தர்க்க ரீதியாகவும் அறிவியல் சார்பாகவும், இயற்கையையும் மனித சமூகத்தையும் ஆராயும் முறை.
- ஆரம்பகால தத்துவ ஞானிகளாக தேலிஸ், அனெக்சிமென்டர், அனக்சீபீனிஸ் ஆகியோர் திகழ்ந்தனர்.
- சோக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்றவர்களும் இதில் சிறந்து விளங்கினர்.

**( 14 புள்ளிகள் )**

**( 03 )** **‘ஐரோப்பிய நாகரிகத்தின் வளர்ச்சியிலே மறுமலர்ச்சி ஒரு திருப்புமுனையைக் குறித்து நின்றது’.**

(i) மறுமலர்ச்சி ஆரம்பித்த நாட்டின் பெயரைத் தருக.

இத்தாலி **( 01 புள்ளி )**

(ii) மறுமலர்ச்சிக்கு ஆதரவளித்த இருவரின் பெயர்களைத் தருக.

குடும்பங்கள்

- மிலானில் -ஸ்பர்சா
- புளோரன்ஸில் - மெடிசி
- பராராவில் - எஸ்தே
- மாண்டுவாவில் - கொன்சாகா

நபர்கள்

- IV நிகலஸ், IV அலெக்சாண்டர் , II /லியஸ் , X லியோ பாப்பரசர் **( 02 புள்ளிகள் )**

(iii) மறுமலர்ச்சியின் தோற்றத்திற்கு வழிவகுத்த பிரதான காரணிகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

- இத்தாலியின் பொருளாதார, சமூக, அரசியல் பின்னணி
- மானிய முறையின் வீழ்ச்சி
- வர்த்தக விருத்தி, வர்த்தக நகரங்களின் தோற்றம், பணம் படைத்த மத்திய வகுப்பினரின் தோற்றம் மற்றும் இவர்களின் பங்களிப்பு.
- இத்தாலியப் பிராந்திய பகுதி அரசர்கள் மற்றும் மதகுருமார்களின் ஆதரவு.
- பண்டைய உரோம நாகரிகத்தின் சிதைவுகள், மறுமலர்ச்சிக்கு ஏதுவாயமைந்தன.
- இத்தாலியப் பல்கலைக் கழகங்களில் சமயத்துக்குப் புறம்பாக வைத்தியம், சட்டம் போன்ற லௌகீக கல்வியும் போதிக்கப்பட்டன.
- 1453 ஆண்டு கொன்ஸ்தாந்துநோபிளைத் துருக்கியர்கள் கைப்பற்றியதால் அங்கிருந்த அறிவியல் நூல்கள் இத்தாலிக்கு எடுத்துவரப்பட்டன.

**( 4 புள்ளிகள் )**

(iv) கலைத்துறையிலும், அரசியல் துறையிலும், தத்துவத்துறையிலும் ஏற்பட்ட விழிப்புணர்வை விஷேட கவனத்திற்கொண்டு ஐரோப்பிய நாகரிகத்தின் வளர்ச்சியிலே மறுமலர்ச்சி ஒரு திருப்புமுனையைக் குறித்து நின்றதனைப் பரிசீலனை செய்க.

- கிரேக்க, இலத்தீன் மொழிகள் வளர்ச்சியடைந்தன.
- மொழி, மானிடவியல் கற்கைகள் வளர்ச்சியடைந்தன.
- மானிடவாதத்தின் எழுச்சி.
- கலைத்துறை வளர்ச்சி ஏற்பட்டமை. கட்டிடக்கலை, சிற்பம், செதுக்கல் கலைகள், கிரேக்க, உரோம கலைகளின் சாயல்களில் வளர்ச்சியடைந்தன.
- சித்திரக்கலை துரித வளர்ச்சி கண்டது. டாவின்சியின் - மோனாலிஸா, மைக்கல் ஆஞ்சலோவின்- டேவிட்
- இயற்கைத் தன்மை மற்றும் லௌகீகத் தன்மைகளை வெளிக்காட்டும் வகையில் இச்சிலைகள் காணப்பட்டன.
- புதிய அரசியல் சிந்தனைகள் தோன்றியமை. (மக்கியவல்லி)

**( 07 புள்ளிகள் )**

**04) (I) பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் தேசிய அரசுகளின் தோற்றத்திற்கு வழிவகுத்த காரணிகள் யாவை?**

- மானியமுறையிலான அரசியல், பொருளாதாரத்துறைகளின் வளர்ச்சி.
- மத்தியவகுப்பினரின் எழுச்சி.
- தேசியவாதத்தின் எழுச்சி.
- ஆட்சியாளர்களின் விஷேட ஆளுமை.
- மறுமலர்ச்சியின் தாக்கம்.
- அரசன் மற்றும் , அரசு பற்றிய புதிய கருத்துக்கள்
  உ+ம்: மக்கியவல்லியின் - இளவரசன்

**( 06 புள்ளிகள் )**

(II) தேசிய அரசுகளின் பிரதான பண்புகளைப் பரிசீலனை செய்க.

- பொதுவான மொழியைப் பேசுகின்ற, பொதுவான கலாசாரத்தைப் பின்பற்றுகின்ற, நிலையான எல்லைகளைக் கொண்ட அரசாட்சிக்குட்பட்ட அரசை தேசிய அரசு என்பர்.
- தேசிய ஒருமைப்பாடு.
- அதிகாரம் குவிக்கப்பட்ட பலமான அரசாட்சி.
- நிலையான இராணுவம்
- மத்திய நிர்வாகத்தையும் இராணுவத்தையும் வழிநடத்தக் கூடிய அதிகாரிகள்
- மத்தியதர வகுப்பினரின் ஆதரவு அரசுக்கு கிடைத்தமை. நிர்வாகத்தில் இவர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டமை.
- பிரதானிகளின் அதிகாரம் வீழ்ச்சிகண்டது.
- நாடுகாண் பயணிகளுக்கு ஆதரவு வழங்கியமை.

**(08 புள்ளிகள் )**

**05) (I) அமெரிக்கச் சுதந்திரப்போருக்கான பிரதான காரணங்களை ஆராய்க.**

பொருளாதாரக் காரணிகள் :

- வட அமெரிக்கக் குடியேற்றங்களில் பிரித்தானியர் கடைப்பிடித்த முதலாளித்துவக் கொள்கை.
- இவை கப்பலோட்டச்சட்டம் மற்றும் வர்த்தகச் சட்டங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டன.
- பிரித்தானியாவில் உற்பத்தி செய்யும் சில பொருட்கள் குடியேற்றங்களில் உற்பத்தி செய்வதை தடுத்தன.
- குறித்த சில பொருட்களைத் தாய் நாட்டுக்கு மாத்திரம் விற்பனை செய்யுமாறு பணித்தனர்.
- பொருட்களின் பரிமாற்றத்தின்போது பிரித்தானியக் கப்பல்களை மாத்திரம் பயன்படுத்தக் கோரினர்.

அரசியல் காரணிகள் :

- பிரித்தானியவில் விதிக்கப்பட்ட மோசமான வரிகளை குடியேற்றவாசிகள் எதிர்க்கத் தொடங்கினர்.
- 7 ஆண்டுப் போரின் பின்னர் தொடர்ந்தும் பிரித்தானிய இராணுவத்தின் பாதுகாப்பு குடியேற்றங்களுக்குத் தேவைப்படவில்லை.
- பிரித்தானியப் பாராளுமன்றம் தொடர்ந்தும் புதிய வரிகளை நடைமுறைப்படுத்தினர்.(டவுன்ஸன் சட்டம், முத்திரை, தேயிலை வரிகள்) சில வரிகள்
  மக்கள் எதிர்ப்புக் காரணமாக இரத்துச் செய்யப்பட்டாலும், குடியேற்றங்களிலிருந்து தாய் நாட்டிற்கு வரி அறவிடும் உரிமை உண்டு எனச் சுட்டிக்காட்டித் தேயிலை வரியை பிரித்தானியப் பாராளுமன்றம் தொடர்ந்தும் முன்னெடுத்தது.
- இவ்வெதிர்ப்பு அரசியல் சுதந்திர நோக்கில் வளர்ச்சியடைந்தது. (பிரதிநிதித்துவம் இன்றேல் வரி இல்லை), பொஸ்டன் தேநீர் விருந்து.

**( 6 புள்ளிகள் )**

(II) அமெரிக்க சுதந்திரப் போரின் பிரதான விளைவுகளைப் பரிசீலனை செய்க.

- அமெரிக்க சுதந்திரப் போரிற்கு பின்பு ஐக்கிய அமெரிக்க ஒன்றியம் என்ற பெயரில் சுதந்திர அரசொன்று உருவாகியது.
- கூட்டாட்சி முறை, எழுதப்பட்ட அரசியல் திட்டம், உரிமைகள் தொடர்பாக இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடி விடுதலை பெற்ற முதல் நாடு.
- போராட்டக் கலகத்தின் போது சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டது.
- ஆங்கிலப்பேரரசின் வீழ்ச்சியின் முதற் படியாக இது விளங்கியது.
- பிரான்சியப் புரட்சிக்கும் இவ்வமெரிக்கப் புரட்சியே வழிவகுத்தது.
- 19 ஆம் நூற்றாண்டில் தென் அமெரிக்கப் பகுதிகளில் ஸ்பானியா, போர்த்துக்கல் ஆகிய நாடுகளிற்கு எதிராக இடம்பெற்ற விடுதலைப் போராட்டங்களிற்கும் முன்னோடியாக அமைந்தது.

**(8 புள்ளிகள் )**

**06. (I) 1815-1848 காலப்பகுதியில் ஜேர்மனிய ஐக்கியத்திற்குப் பிரதான தடையாக இருந்தவற்றை எடுத்துக்காட்டுக.**

- 39 அரசுகளாகப் பிரிக்கப்பட்டமை.
- ஆஸ்திரியாவின் தாக்கம் மற்றும் அதிகாரம்.
- மெட்டர்னிக் முறை/கொள்கை.
- வியன்னா மாநாட்டுத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த ஐரோப்பிய அரசுகள் இணங்கி இருந்தமை.
- தேசியவாதம் முழுமையாக அறிமுகப்படுத்தப்படாமை.
- ஜேர்மனிய ஐக்கியத்திற்கு ஏற்ற ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தாது பல திட்டங்களை செயற்படுத்த முனைந்தமை.

**( 06 புள்ளிகள் )**

( II ) 1862 – 1871 காலப்பகுதியில் ஜேர்மனிய ஐக்கியத்திற்காகப் பிஸ்மார்க் முன்னெடுத்த நடவடிக்கைகளை நுணுகிப் பரிசீலனை செய்க.

பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு பெரும்பான்மையோரின் கருத்துக்களைப் பெற்று, தற்காலப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இதனை இரும்பினாலும், இரத்தத்தினாலுமே தீர்க்க முடியும் என பிஸ்மார்க் குறிப்பிட்டார். 1862-1867 காலப்பகுதியில் இவர் கையாண்ட கொள்கைகள்.

- பிரஷ்ய லிபரல்வாதிகளின் அதிகாரத்தைக் குறைத்தமை.
- பிரஷ்ய இராணுவத்தைப் பலப்படுத்தியமை.
- 1864 ஆஸ்திரியாவுடன் இணைந்து டென்மார்க்கைத் தோற்கடித்து ஸ்லஸ்விக் ஹொல்ஸ்டைன் பகுதிகளைக் கைப்பற்றியமை.
- 1866 ஆஸ்திரியாவைத் தோற்கடித்து பிரஷ்யாவின் தலைமையில் வட ஜேர்மன் கூட்டமைப்பை ஏற்படுத்தியமை.
- 1870-1871 பிரான்ஸைத் தோற்கடித்து தென் ஜேர்மன் அரசுகளை வட ஜேர்மன் கூட்டமைப்புடன் இணைத்து ஜேர்மனி ஐக்கியத்தை ஏற்படுத்தியமை.

**( 08 புள்ளிகள் )**

**07. 'முதலாம் உலகப் போருக்கான பிரதான காரணம் ஐரோப்பா இரண்டு அணிகளாகப் பிரிந்து நின்றமையே ஆகும்'**

(I) முதலாம் உலகப்போர் ஆரம்பித்தமைக்கான உடனடி நிகழ்வு என்ன ?

- ஆஸ்திரிய நாட்டு இளவரசன் பேர்டினன்டும் அவனது மனைவியும் பொஸ்னியாவின் சரஜிவோ நகரில் வைத்து சேர்பிய தீவிரவாதக்குழுவால் கொலை செய்யப்பட்டனர்.

**( 1 புள்ளி )**

(II) ஒன்றுக்கொன்று எதிரான இரண்டு அதிகார அணிகளில் இருந்த இவ்விரண்டு நாடுகளைக் குறிப்பிடுக.

- அச்சு அணி – ஜேர்மனி , ஆஸ்திரியா, துருக்கி, ஹங்கேரி, பல்கேரியா
- நட்பு அணி – பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா (யுத்தம் தொடங்கியபோது ஜேர்மன் அணியிலிருந்த இத்தாலி, பின்பு நட்பு அணியில் சேர்ந்துகொண்டது)

**( 2 புள்ளிகள் )**

(III) ஐரோப்பா இரண்டு அணிகளாகப் பிரிந்த விதத்தைத் தெளிவுபடுத்துக.

- பிஸ்மார்க்கின் இராஜ தந்திரக் கொள்கை – ஜேர்மனியை ஐரோப்பாவின் அதிகாரமிக்க நாடாக மாற்றுவதற்கு அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நட்பு ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்.
- அல்சேய்ஸ், லொறைன் பிரச்சினையின் கீழ் பிரான்சைத் தனிமைப்படுத்தும் வகையில் பிஸ்மார்க் மேற்கொண்ட ஒப்பந்த முறையினால் ஐரோப்பிய நாடுகள் இரு அணிகளாகப் பிரிவடைந்தன.
- 1873இல் ஜேர்மன், ஆஸ்திரியா மற்றும் ரஷ்யாவுடன் இணைந்து 3 வல்லரசுகளின் அணி ஒன்றை ஏற்படுத்தியது.
- பின்னர் ரஷ்யா இதிலிருந்து விலகிக்கொண்டது.
- 1879 இல் ஜேர்மனி ஆஸ்திரியா ஹங்கேரி நாடுகளுடன் ஒப்பந்தம் செய்தல்.

- 1882 இல் இத்தாலியை இவ்விரு நாடுகளுடன் இணைத்து முக்கூட்டு நட்பு அணியை உருவாக்கியமை.
- 1894 இல் — ரஷ்யா பிரான்சுடன் இணைந்து கூட்டணி ஏற்படுத்தல்.
- 1904 இல் பிரான்ஸ் பிரித்தானியவுடன் நட்பு ஒப்பந்தம் செய்தல்.
- 1907 இல் ரஷ்யா, பிரான்ஸ் பிரித்தானிய அணியுடன் இணைத்துக்கொள்ளப்பட்டு முக்கூட்டு அணி உருவாக்கப்பட்டது.

**( 4 புள்ளிகள் )**

(iv) ஐரோப்பா இரண்டு அதிகார அணிகளாகப் பிரிவுண்டமை முதலாம் உலகப் போரின் ஆரம்பத்திற்கு எந்தளவு காரணமாயிற்று என்பதனைப் பரிசீலனை செய்க.

- புதிய ஏகாதிபத்தியவாதத்தின் கீழ் ஐரோப்பிய நாடுகளிடையே இடம்பெற்ற குடியேற்றவாதப் போட்டி.
- பிரான்ஸ் - ஜேர்மன் பகை.
- ஜேர்மன் பலம்மிக்க நாடாக வளர்ச்சியுற்றமையும் அதன் வெளிநாட்டுக் கொள்கையும்
- ஜேர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளிற்கிடையிலான கடற்படைப்போட்டி.
- ஆயுதப்போட்டி
- தேசியவாத எழுச்சி
- பால்க்கன் பிரச்சினை.

( முதலாம் உலக யுத்தம் ஏற்பட்டமைக்கான மேற்குறித்த காரணிகளைக் கருத்திற்கொண்டு, ஐரோப்பிய நாடுகள் இரு அணிகளாகப் பிளவடைந்தமை யுத்தத்திற்குக் எந்தளவிற்கு காரணமாக அமைந்தது என்பதை விளக்குதல் வேண்டும்)

**( 7 புள்ளகள் )**

**(08) ருசியாவில் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் போல்ஷவிக்கினரால் 1924 வரை மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களைப் பரிசீலனை செய்க.**

- 1917 ஒக்டோபர் புரட்சியில் ருஷ்யாவின் அதிகாரத்தைக் கைப்பற்றிய போல்ஷவிக்கினர் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தனர்.
- உலகில் எந்தவொரு நாட்டிலும் காணப்படாத சமவுடைமைக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.
- சுதேச அதிகாரத்தை நிலைநாட்டும் வகையில் அரசியல் திட்டமொன்றை ஏற்படுத்த வேண்டியிருந்தது.
- எதிர் புரட்சியாளர்களிடமிருந்து வந்த எதிர்ப்பும், மோதல்களும்
- ஜேர்மனியுடன் சமாதானம் செய்து கொள்ளப்பட்டது.
- வீழ்ந்திருந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டியிருந்தது.

- போல்ஷவிக்கினர் பின்பற்றிய செயற்பாடுகள்
- போல்ஷவிக்கினர்க்கு ருஷ்யாவில் பெரும்பான்மை பலம் காணப்படவில்லை, இதனால் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, கமியூனிசக் கட்சியின் வழிகாட்டுதலுடனான அரசாங்கத்தை அமைத்தல்.
- ஜேர்மனியுடன் -பிரெஷ்ட்- லிடொட்ஸ்க் ஒப்பந்தம்செய்து யுத்தத்திலிருந்து நீங்கியமை.
- வெளிநாட்டு ஆதரவுடன் செயற்பட்ட எதிர்ப் புரட்சியாளர்களைத் தோற்கடித்தனர்.
- பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப நடவடிக்கை எடுத்தமை. (புதிய பொருளாதாரக் கொள்கை)

**( 14 புள்ளிகள் )**

**(09) ஒன்றில் A பகுதிக்கு அல்லது டீ பகுதிக்கு மட்டும் விடை எழுதுக.**

A) (i) ஐக்கியநாடுகள் தாபனத்தின் பிரதான நோக்கங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

- சர்வதேச சமாதானம், மற்றும் பாதுகாப்பை மேற்கொள்ளல்.
- இனங்களிடையே நட்புறவைக் கட்டிஎழுப்புதல்.
- பொருளாதார சமூக, கலாசார மற்றும் மானிட ஆலோசனைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்தல்
- மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்குச் சர்வதேச ஒத்துழைப்பைப் பெறல்.
- இவ்வாறான பொதுநோக்கங்களை அடைந்து கொள்வதற்கு உலகை ஒன்றிணைத்துச் செயற்படல்.

( 5 புள்ளிகள் )

(II) அத்தாபனம் அதன்நோக்கங்களை அடைந்துகொள்வதில் எந்தளவிற்கு வெற்றிபெற்றுள்ளது என்பதனைப் பரிசீலனை செய்க.

- ஐக்கியநாடுகள் தாபனம் இந்நோக்கங்களை அடைந்து கொள்வதில் அனேகமாக வெற்றிபெற்றுள்ளது.விஷேடமாக சமாதானத்தைப் பேணுவதில், கொங்கோ சிவில் யுத்தம், ஒல்லாந்து இந்துனேசியாவிற்கிடையிலான கருத்து மோதல் போன்ற பெரிய வல்லரசுகள் பங்கு கொள்ளாத ஐக்கிய நாடுகளின் சமாதான முயற்சிகள் வெற்றி பெற்றாலும் வல்லரசுகள் பங்கு கொண்ட மோதல்களைத் தவிர்க்க முடியாமல் போனது.
- ஐக்கியநாடுகள் தாபனத்தின் பங்குபற்றுதலினால் தீர்க்கப்பட்ட சில பிணக்குகள்.
- 1946 கிழக்கு இந்தியத் தீவுகளிலிருந்து ஒல்லாந்தை வெளியேற்ற இடம்பெற்ற சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவளித்தமை.
- பலஸ்தீன - இஸ்ரேல் (முற்றாகத் தீர்க்க முடியவில்லை).
- 1950 – 53 கொரியன் பிரச்சினை
- 1956 சுயஸ் பிரச்சினை
- 1956 ஹங்கேரிய மக்கள் கிளர்ச்சி
- பெல்ஜியம், கொங்கோ உள்நாட்டு மோதல்
- சைப்பிரஸ் பிணக்கு
- காஷ்மீர் பிணக்கு
- 1968 செக்கோஸ்லொவாக்கியப் பிணக்கு
- 1979 ரஷ்யா, ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றல்.

( 9 புள்ளிகள் )

( B ) கீழ்வருவனவற்றில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறுகுறிப்புகள் எழுதுக.

(i) பேரரசு ஆரம்பகாலம் வரையான உரோமில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு மாற்றங்கள்

(B) (i) *பிரதான மாற்றங்கள் 3 இடம்பெற்றன.*

*(அரசாட்சி – கி.மு 753 – 510இ கூட்டாட்சி – கி.மு. 510 – கி.மு.27, பேரரசாட்சி கி.மு. 27 – கி.பி.476 )*

❖ *அரசாட்சி*

- *முதலாவது அரச ஆட்சி முறை*
- *அரசனுக்கு சகல அதிகாரங்களும் இருந்தன. (சட்டம், நீதி, நிர்வாகம், அதிகாரிகளை நியமித்தல், தலைமைப் பூசகராக செயற்படல் போன்ற அதிகாரம்)*
- *அரசனின் கீழ் மூத்தோர்கள் சபை (செனட்) இருந்தது. முக்கியமான தீர்மானங்களை எடுக்கும்போது இச்சபையின் ஆலோசனை பெறப்பட்டது.*
- *நிலச் சொந்தக்கார பிரபுக்களிற்கு (பெட்றீசியன்) மாத்திரம் அரசியல் அதிகாரம் கிடைத்தது.*

- இறுதி உரோம அரசனான டார்க்வின் அரசனைத் துரத்திவிட்டு கூட்டாட்சியை பெட்ரீசியன்கள் ஏற்படுத்தினர்.

❖ கூட்டாட்சி
- முதலில் அரசனுக்குரித்தாக இருந்த சிவில், யுத்த அதிகாரம் இரண்டு கொன்சல்களிடம் ஒப்படைக்கப் பட்டது.
- அவர்களின் பதவிக் காலம் ஒரு வருடமாகும்.
- ஒருவரின் முடிவை மற்றவர் எதிர்த்துக் கருத்து வெளியிடும் அதிகாரம் கொன்சல்களிடம் இருந்தது.
- நிர்வாகச் செயற்பாடுகளின்போது கொன்சல்களிற்கு உதவியாக, நீதிபதிகளும், நிர்வாகிகளும் வருடாந்தம் நியமிக்கப் பட்டனர். சென்சூரியன் சபை இவர்களை நியமித்தது.
- செனட்சபை நிர்வாகத்தில் பலமான அங்கமாக இருந்தது (நிதி மற்றும் வெளிநாட்டு விடயங்களை இச்சபையே முன்னெடுத்தது) இச்சபையில் பெற்றீசியன்கள் அங்கம் வகித்தனர்.
- பெற்றீசியன்களின் அதிகாரத்திற்கு எதிராக நீண்டகாலமாக சாதாரண மக்கள் மேற்கொண்ட போராட்டத்தினால் பிலிபியன்களைக் கொண்ட சபை ஒன்று அமைக்கப்பட்டது.
- உரோம அதிகாரம் விசாலமான பகுதிகளிற்குப் பரவியது.

❖ பேரரசு காலம்
- கி.மு. 27 ஆட்சிக்கு வந்த ஒக்டோவியஸ் எனப்பட்ட ஒகஸ்டஸ் உரோமின் முதலாவது பேரரசனானான்.
- பேரரசனிடமே சகல அதிகாரங்களும் குவிந்திருந்தது.
- செனட் சபை பேரளவாகச் செயற்பட்டது.

(7 புள்ளிகள்)

(ii) மானிய முறையின் வீழ்ச்சி
- ❖ சிலுவை யுத்தத்தின் விளைவாக வர்த்தகம் வளர்ச்சியடைந்தமை.
- ❖ பண்ணைகளில் ஏற்பட்ட கொள்ளை நோய்.
- ❖ வர்த்தக வகுப்பினரின் எழுச்சி.
- ❖ பணப்புழக்கம் அதிகரித்தமை.
- ❖ நகரங்கள் தோன்றியமை.
- ❖ நிலத்தை அடிப்படையாகக் கொண்ட சேவை முறை வீழ்ச்சி கண்டமை.

(7 புள்ளிகள்)

(iii) போர்த்துக்கேயரால் மேற்கொள்ளப்பட்ட புவியியல் கண்டுபிடிப்புகள்.
- ❖ துருக்கியர் ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகள் மேற்கொண்ட தரைவழி வர்த்தகத்தின் மத்திய நிலையத்தை தனதாக்கியதால் புதிய கடல் வழிகளைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டனர்.
- ❖ போர்த்துக்கல் கடலை அண்டிக் காணப்பட்டமை.
- ❖ கடலோடி ஹென்றி மன்னனின் பங்களிப்பு (சாக்ரேஸ் எனுமிடத்தில் கடற்படை பயிற்சி நிலையம் அமைக்கப்படல், தேசப்படங்களை வரைந்தமை)
- ❖ வியாபார நோக்கம்
- ❖ பிரதான கடல் பயணங்கள்
  - மேற்கு ஆபிரிக்காவின் கோல்ட் – கோஸ்ட் மற்றும் கொங்கோ நதியின் கழிமுகம் வரை பயணித்தல்.
  - பார்த்தலோமியோ டயஸ் நன்னம்பிக்கை முனைவரை பயணித்தமை.
  - வாஸ்கொடகாம இந்தியாவின் கள்ளிக்கோட்டை வரை பயணித்தமை.
  - கப்ரால் பிரேசில் வரை பயணித்தமை.
  - பிரேசிலைக் கைப்பற்றியமை.
  - ஆசியாவில் பரந்த பகுதியில் சிதறி சிறிய பல அரசுகளை தனதாக்கியமை.

(7 புள்ளிகள்)

(iv) 1688 ஆங்கிலப் புரட்சி

- ❖ அரசனுக்கும் பாராளுமன்ற பிரதிநிதிகளுக்குமிடையில் இடம் பெற்ற அதிகாரப் போட்டி / பிணக்கு.
- ❖ ஸ்டுவர்ட் வம்ச அரசர்கள் அரச அதிகாரத்தை கையில் எடுத்துப் பாராளுமன்றத்தைப் புறந்தள்ளிச் செயற்பட்டமை.
- ❖ கத்தோலிக்கர்களான ஸ்டுவர்ட் அரசர்களிற்கும் புரட்டஸ்தாந்து வாதிகளான பாராளுமன்ற பிரதிநிதிகளுக்குமிடையில் இடம் பெற்ற சமயப் பிணக்கு.
- ❖ பின்புலம்
  - 1642 இல் உள்நாட்டு யுத்தம்
  - 1649 இல் 1ஆம் சார்ள்ஸ் கொலை செய்யப் பட்டமை.
  - இரண்டாம் சார்ஸின் சர்வதிகார நிர்வாகம்.
  - 1688 புரட்சி
- ❖ விளைவுகள்
  - பாராளுமன்றத்தின் உரிமைகள் உறுதிப் படுத்தப்படல்.
  - அரசனின் அதிகாரம் வரையறுக்கப்படல்.
  - 1689 உரிமைகள் சட்டம் தோன்றல்.

**(7 புள்ளிகள்)**

(v) ஐரோப்பிய மாநாட்டு முறைமை

- ❖ 1815 வியன்னா மாநாட்டின் மூலம் சமாதானத்தைப் பேணுவதற்காக இம்மாநாட்டு முறை ஏற்படுத்தப் பட்டது.
- ❖ ஆஸ்திரியா, ரஷ்யா, பிரஷ்யா, இங்கிலாந்து முதலிய நாடுகள் இம்முறையின் ஆரம்ப அங்கத்தவர்களாவர்.
- ❖ 1818 அச்சிலா செபல் 1820 டர்போஇ 1822 லைபெக், 1822 வெரோனா போன்ற மாநாடுகளில் சமகால ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட கிளர்ச்சிகளுக்குத் தீர்வு பெறப்பட்டது.
- ❖ இம்மாநாட்டு முறைமை தோல்வி கண்டாலும் பின்னர் 1ஆ ம், 2 ஆம் உலக யுத்தங்களின் பின் தோன்றிய சர்வதேச சங்கங்களின் தோற்றத்திற்கு இம்முறை அடித்தளமாக அமைந்தது.

**(7 புள்ளிகள்)**

(vi) போர் இடைக்காலத்தில் சர்வாதிகார ஆட்சி

- ❖ முதலாம் உலகப் போரின் பின்னர் இத்தாலியில் பாசிசமும், ஜேர்மனியில் நாசிசமும் எழுச்சி பெற்ற முறையை விளக்குதல்.
- ❖ முதலாம் உலக யுத்தத்தின் பின் இடம்பெற்ற சமாதான முயற்சிகள், யுத்தத்தின் பின் இத்தாலியில் ஏற்பட்ட உறுதியற்ற அரசியல் நிலை, யுத்தத்தில் தோல்வி அடைந்ததால் ஜேர்மன் அடைந்த அவமானம், இதனால் ஏற்பட்ட பழிவாங்கும் மனநிலை, பொருளாதாரச் சீர்குலைவு என்பவற்றால் ஜனநாயகம் செயலிழந்து கட்டளையிடும் சர்வதிகார ஆட்சி எழுச்சி பெறக் காரணமாகியது.
- ❖ பாசிச, நாசிசவாதத்தின் பொது இயல்புகள்
  - அடிப்படை இனவாதம் – தனது இனம் ஏனைய இனங்களை விட மேலானது.
  - சர்வதிகார அரசாட்சி – தனிப்பட்டவர்களின் நலனை விட அரசின் நலனை மேலாகக் கருதுதல், தனிமனித சுதந்திரத்தை முற்றாகத் தடை செய்தமை.
  - ஒரு கட்சி முறை – ஜனநாயகத்திற்கு இடம் வழங்கப்படாது கம்யூனிசம் முற்றாகத் தடுக்கப் பட்டது.
  - பொருளாதார மேம்பாட்டை அடைந்து கொள்ளப்பாடுபட்டமை அரசு பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்தது.
  - இராணுவ பலம், வன்முறைகள் மூலம் எதிர்த்தரப்பினர் கட்டுப்படுத்தப் பட்டனர்.
  - யுத்தத்தை முன்னிறுத்தி ஆக்கிரமிப்புச் செய்யும் வெளிநாட்டுக் கொள்கையைக் கையாண்டமை.

**(7 புள்ளிகள்)**

***